## கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 - 2017

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் 11 ஆம் உறுப்புரையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 மற்றும் 2013 யூன் 28 ஆம் திகதிய 2948 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டமானது (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை புனரமைத்து வரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற தண்ணீரைக் குதைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்கள் மற்றும் முகாமையின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல், (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை அமுலாக்கல் என்பவற்றினை எதிர்பார்க்கப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் அல்லது 25 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2019 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு,

கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்தான செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 16.34 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலையின் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) இன்னொரு செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட வெலவல பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டிடமொன்றின் நிர்மாணத்திற்காக மண் பரிசோதனை நோக்கத்திற்காக நிகழ்ச்சித்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட ரூபா 1.2 மில்லியன் தொகை தவறுதலாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிக் தைவிர்ப்பு கைநூலின் 4.12 ஆம் பிரிவின் பிரகாரம், நிர்மாண காலப்பகுதியின் போது ஏற்பட்ட வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மூலதனமாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரை நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்ட ரூபா 166.37 மில்லியன் தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் நிர்மாணக் கிரயமாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 06 (i) (அ) ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், கேள்வி உடன்படிக்கை கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் பதியப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 84 | 11,088 | 1,567 | 11.94 | 1,856 | 39.65 | 5,676 |
| இலங்கை அரசாங்கம் | **28** | **3,696** | **213** | **1.27** | **198** | **12.62** | **1,801** |
| **மொத்தம்** | **112** | **14,784** | **1,780** | **13.21** | **2,054** | **52.27** | **7,477** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 4 1/2 ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீடின் 47.2 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,676 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39.65 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, நிகழ்ச்சித்திட்டத்தின் மிகுதியாகவிருக்கின்ற காலப்பகுதிக்குள் மிகுதி தொகையின் பயன்பாட்டின் சாத்தியத் தன்ஐ கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

நிகழ்ச்சித்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் முறையே 37.41 சதவீதம் மற்றும் 47.39 சதவீதமாக இருந்தது. கொழும்பு நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களின் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பின் பிரதான ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 45 சதவீதம் மற்றும் 27 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. கொள்வனவு நடைமுறை பின்பற்றுதல், குழாய்கள் குழாயிடல் வேலைகளிற்கான திறந்த அகழ்தல் முறையிக்கு அகழ்தலல்லாத முறையின் மாற்றம், ஒப்பந்தங்களின் குறைவான செயலாற்றல் போன்றவற்றிலுள்ள தாமங்கள் நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் மெதுவான முன்னேற்றத்திற்கு வழிவகுத்திருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு நகரத்தின் மேற்கு பிராந்தியத்திற்காக வருமானமற்ற தண்ணீர் மீதான ஆலோசனை சேவைகள் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் ஊடக பிரச்சாரம் போன்ற பல கூறுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்த திகதியனிள் பூர்த்தியாக்கல் 2019 யூன் 30 ஆன நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதிக்குப் பின்னால் முறையே 2021 பெப்ரவரி 21 மற்றும் 2020 ஒக்தோபர் 31 ஆன நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு நகரத்தின் வடக்குப் பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2015 சனவரி மாதத்தில் தொடங்கப்பட்டிருந்தது. ஆகவே, 16 மாவட்ட மீற்றரிடுகின்ற பகுதிகளில் 142,269 மீற்றர்கள் குழாய்கள் குழாயிடல் மற்றும் அமுக்கப் பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் 40,460 வீடுகளின் இணைப்புக்கள் என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்த காலப்பகுதியின் 3 1/2 ஆண்டுகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 1/2 ஆண்டுகள் கடந்த பின்னர் 03 மாவட்ட மீற்றரிடுகின்ற பகுதிகளில் குழாய்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், வேறு 03 மாவட்ட மீற்றரிடுகின்ற பகுதிகளில் 14,100 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5,981 வீடுகளிற்கு மாத்திரம் இணைப்புகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 யூலையில் தொடங்கப்பட்டு 2019 யூலையளவில் பூர்த்தியாக்க்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட கொழும்பு நகரத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. ஆகவே, 137,209 மீற்றர்கள் குழாய்கள் குழாயிடல் மற்றும் அமுக்கப் பரிசோதனை நடவடிக்கைகள் 20 மாவட்ட மீற்றரிடுகின்ற பகுதிகளில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 10 மாவட்ட மீற்றரிடுகின்ற பகுதிகளில் 58,106 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் ஒப்பந்த காலப்பகுதியின் 4 ஆண்டுகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 1/2 ஆண்டுகள் கடந்த பின்னரும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், அத்திகதியில் உள்ளவாறு 1,039 வீடுகளிற்கு மாத்திரம் இணைப்புகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த கேள்வி ஆவணத்தின் பிரகாரம், கொழும்பு நகரத்தின் வடக்குப் பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தம் குழாய்கள் குழாயிடல் நோக்கத்திற்காக குழாய் இணைத்தல் மற்றும் குழாய் வெடித்தல் முறையை பின்பற்றுவதற்கு விதந்துரைத்திருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் வேண்டப்பட்டவாறு, குழாய்கள் குழாயிடலிற்காக திறந்த அகழி முறை பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணத்தின் 3.1 மற்றும் 13.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பெறப்பட வேண்டுமென வேண்டப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அனுமதிக்குப் பதிலாக அவற்றின் செயற்திட்ட பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அனுமதி மாத்திம் பெறப்பட்டிருந்தது.

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளில் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் குழாய்கள் குழாயிடல் வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் 2016 மே மாதத்தில் தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 நவம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டிருந்ததுடன் குழாய்கள் குழாயிடல் வேலைகளின் நோக்கெல்லையின் பின்னரான மாற்றங்களை கருத்திற்கொள்ளாமல் மேலதிகமாக ரூபா 2.93 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4. சர்ச்சைக்குரிய தண்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் அளவீட்டுப் பட்டியலில் ரூபா 23 மில்லியன் தொகையான பிணை முறி வைப்புக்களிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புக்களிற்குப் பதிலாக கடன் பெறுகைகளில் வீதி

அபிவிருத்தி அதிகாரசபையில் செயற்திட்டத்தால் ரூபா 16.56 மில்லியன் தொகையான பிணை வைப்புக்கள் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு நகரத்தின் வடக்குப் பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு முறைமை புனரமைப்பின் குழாய்கள் குழாயிடலிற்கான ஒப்பந்தத்தின் ஆரம்ப வடிவமைப்பபனிக் பிரகாரம், குழாய் அகழ்வுகளின் திரும்ப தூர்த்தல் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு கடடிட இடிபாடுகளின் துகள்கள் அனுமதிக்கப்பட்டது. ஆகவே, நிகழ்ச்சித்திட்டமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைால் பின்பற்றப்பட்ட ஒரு கனமீற்றறிற்கு ரூபா 6,800 ஆன சாதாரண வீதத்தில் கட்டிட இடிபாட்டுத் துகள்களை கருத்திற் கொள்ளாமல் ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட ஒரு கனமீற்றறிற்கு ரூபா 7,755 ஆன வீதத்தில் வெளித்தரப்பினரிடமிருந்து கட்டிட இடிபாட்டுத் துகள்களை பெற்றிருந்தது.

### 3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,274 மில்லியன் கூட்டுத்தொகையான 04 சிவில் ஒப்பந்த வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட கோரிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, நிலுவையாகவிருக்கின்ற பட்டியல்களில் தாமதக் கட்டணங்களை செலுத்துவதற்கான சாத்தியத்தன்னை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டமானது முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6. முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

---

2014 மே 29 இல் வெளிநாட்டுக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 24.37 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நீரகசிவு கண்டறிவதற்கான உபகரணத்தின் வழங்குதல் மற்றும் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட உபகரணத்தின் பல உபபாகங்கள் முன்னைய ஆண்டுகளில் ரூபா 10.62 மில்லியன் கிரயத்தில் அதே கம்பனியின் உள்நாட்டு முகவரால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2017 திசெம்பர் 31 வரையும் உபகரணத்தின் மிகுதி இருப்புக்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 முரணாண கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்ட ஆவணங்களின் பிரகாரம், கொழும்பு மேற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் துறைக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவின் வசதிக்கு மோட்டார் வாகனமொன்றை ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 8.99 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அல்லாத பகுதியாகவிருந்த சப்ரகமுவ மாகாணத்தின் பிரதேச ஆதார நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் ஊழியர்களிற்கு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு உரிய ஊழியர்களிற்கு பொறுப்பகள் அற்ற போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 2.12 மில்லியன் தொகையான சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.